3239
PE

## அகில இலங்கைத்

# தமிழ்க் காங்கிரஸ்

## யாப்பு

A. C. T. C.

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## யாப்பு

### பிரகடனம்

''அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 1944-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து இயங்கி வருவதாலும்; அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தொடர்ந்தும் தமிழ் பேசும் இனத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்யவேண்டியிருப்பதாலும், இதுவே கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களதும், அங்கத்தவர்களாகிய எங்களதும் விருப்பமாக இருப்பதாலும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயற்குழுவினால் கட்சிக்கு விசுவாசமற்றும், கடமையைப் புறக்கணித்தும் நடந்த குற்றத்திற்காகக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களான கடந்தகாலப் பொதுச் செயலாளரும் முக்கிய பதவிகள் வகித்த சிலரும் யாப்பின்படி செயற்படாமல் ஒழுங்கற்ற நிலையைத் தோற்றுவித்தமையாலும், அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களாகிய நாம் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு 120, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள காங்கிரசின் தலைமைச் செயலகமான ''காங்கிரஸ் இல்லத்தில்'' மகாசபையாகக்கூடி இதுவரை காலமுமிருந்து வந்த யாப்பினை முற்றாக நீக்கி அதற்குப் பதிலாக இப்புதிய யாப்பினை வகுத்தமைத்து சட்டமாக்கி எமக்களித்துக் கொள்ளுகின்றோம்.

1. **பெயர்**

இந்த நிறுவனம் ''அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்'' என்னும் பெயரால் அழைக்கப்படும். இவ்விதிகளில் ''காங்கிரஸ்'' அல்லது ''தமிழ்க் காங்கிரஸ்'' என்றுவரும் சொற்கள் ''அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைக்'' குறிக்கும்.

## 2. கொடி

2.1 காங்கிரஸ் கொடி சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பச்சை ஆகிய நான்கு நிறங்களைக் கொண்டிருக்கும்.

2.2 காங்கிரஸ் கொடியின் அமைப்பு செங்குத்தாக சிவப்பு நிறத்தையும் அதனோடு இணைந்து அதற்குக் கிடையாக, மஞ்சள், வெள்ளை, பச்சை, ஆகிய நிறங்களையும் கொண்டு அமை திருக்கும்

சிவப்பு நிறம்: காங்கிரசின் சமதர்மக்கொள்கை, சுயமரியாதை, தியாக உணர்வு, ஆகியவற்றையும் தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற உழைக்கும் மக்களையும் குறிக்கின்றது.

மஞ்சள் நிறம்: காங்கிரசின் சுதந்திரக் கொள்கை, புனிதம், தமிழ் பேசும் மக்களின் மங்களவாழ்வு ஆகியவற்றையும் தமிழ் மக்களையும் குறிக்கின்றது.

வெள்ளை நிறம்: காங்கிரசின் தூய்மை, நேர்மை, சமாதானத்தில் அதற்குள்ள அக்கறை, தமிழ் மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் தொழிலாளிகள், விவசாயிகள் போன்றோரினதும் ஒற்றுமையையும் குறிக்கின்றது.

பச்சை நிறம்: காங்கிரசின் பொருளாதாரக்கொள்கை தமிழ் பேசும் மக்களின் சுபீட்சம் ஆகியவற்றையும் முஸ்லீம் மக்களையும் குறிக்கின்றது.

## 3. இலட்சியங்களும் நோக்கங்களும்

3.1 சுயாட்சியின் மெய்ப்பொருளை எந்தவொரு அரசமைப்பின் கீழும் இன, மத, மொழி, சாதி வேறுபாடின்றி மக்கள் அனைவரும் தத்துவ அடிப்படையிலும் செயலிலும் எய்தும் வாய்ப்புடையவராக இருத்தல் வேண்டும் என்ற அரச இயலின் அடிப்படைத் தத்துவத்தை தமிழ்க் காங்கிரஸ் வற்புறுத்துகின்றது.

மேற்கு வல்லரசுகளின் சாம்ராச்சியப்பிடியிலிருந்து விடுபட்ட இலங்கையில் உருவாகிய அரசமைப்புக்களின்கீழ் சிங்கள இனமக்கட்குக் கிடைத்தவாறு சுயாட்சியின் மெய்ப்பொருள் இங்கு வாழும் தமிழ் பேசும் இனத்திற்குக் கிடைக்கவில்லை என்பதே தமிழ்க் காங்கிரசின் கருத்தாகும்,

3.2 தமிழ் பேசும் இனத்தின் சுதந்திரத்தினை நிலைநாட்டுவதே தமிழ்க் காங்கிரசின் தலையாய குறிக்கோளாகும்.

3.3 * சிங்களம் பேசும் இனத்திற்குக் கிடைத்ததுபோலச் சுயாட்சியின் மெய்ப்பொருள் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்திற்கும் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்குதல்.

* தமிழ் பேசும் இனம் சுயமரியாதையுடன் வாழ்வதற்காக, இன, மத, மொழி உரிமைகளை நிலைநாட்டுதல்.

* தமிழ்பேசும் இனத்தின் மரபுவழித் தாயகத்தைப் பாதுகாத்தல்.

* தமிழ் பேசும் இனத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்

* அடிப்படைச் சுதந்திரங்களைப் பேணல்.

* தமிழ்மொழியையும் ஆட்சிமொழியாக்கல்.

* மனிதனுக்கு மனிதன் தாழ்வு கற்பிக்கும் சாதிப்பாகுபாட்டினை அறவே ஒழித்தல்.

* தமிழ்பேசும் இனத்தின் மொழி, கலை, கலாச்சாரம் பண்பாடு இவற்றின் மேம்பாட்டிற்காகப் பாடுபடுதல்.

* தொழில், கல்வி, வேலை வாய்ப்புப் போன்ற துறைகளில் திறமைக்கு மதிப்பும், பாரபட்சமற்ற சமசந்தர்ப்பமும், நிலவச் செய்தல்.

* தாய் மொழியான தமிழில் கல்வி பயில்வதற்கான உரிமையை நிலைநாட்டுதல்.

* தமிழ் மக்களினதும், முஸ்லீம் மக்களினதும் உறவையும் ஒற்றுமையையும் வளர்த்தல், அவர்களின் தனித் தன்மையைக் காத்தல்.

* தமிழ்பேசும் இனத்தின் மரபு வழித் தாயகத்திற்கு வெளியே வாழும் தமிழ்பேசும் மக்களின்; மலையகத் தமிழரின் நல உரிமைகளுக்கு உழைத்தல்.

* உலகத் தமிழர்களுடனுன உறவை வளர்த்தல்.

* உலகில் சுதந்திரத்திற்காக இனவிடுதலைக்காகப் போராடும் மக்களுக்கும் இயக்கங்களுக்கும் அனுதாபமும் ஆதரவும் காட்டுதல்.

இவற்றை எய்ய செயற்படுத்தக்கூடிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தமிழ்க்காங்கிரஸ் எடுக்கும்.

3.4 ஜனநாயகம் அல்லது மக்களாட்சி என்ற புனித தத்துவத்தில் தமிழ்க் காங்கிரஸ் பூரண நம்பிக்கை வைத்து அதன் முக்கிய அம்சங்களாகிய

* சுதந்திரமான திணிப்பின்றிய தேர்தல் முறை.
* எதிர்க்கட்சி இயங்குவதற்கான பூரண சுதந்திரம்.
* சட்டரீதியான ஆட்சி.
* சுதந்திரமான நீதி பரிபாலனம்.
* அரசியல் சார்பற்ற பொது நிர்வாகம்.
* தனிமனித சுதந்திரம்.
* கருத்துப் பரிமாறும் சுதந்திரம்.
* பத்திரிகைச் சுதந்திரம்.
* பொதுஜன அபிப்பிராயம் உருவாக்கும் வாய்ப்பு.
* சாதி, மத, இன, சமூக வேறுபாடின்றி அனைவரும் சமமாக நடாத்தப்படல்.

என்பனவற்றை நிலைநாட்டப்பாடுபடுதல்,

3.5 சமதர்மம் என்ற புனிததத்துவத்தை வலியுறுத்தி

* சாதி, மத, இன, சமூக வேறுபாடின்றி மனிதன் சமமாக நடாத்தப்படல்,
* அனைவருக்கும் சமசந்தர்ப்பம் வழங்கல்.
* சமுதாய நலனுக்கு முக்கியத்துவம் அளித்தல்,
* நாட்டு வருவாயும், செல்வமும் நியாயமான முறையில் பங்கீடு செய்யப்படுவதற்கு வழிவகுத்தல்,

* உழைப்புச் சந்தர்ப்பம் அனைவருக்கும் கிடைக்க ஆவன செய்தல்.

* வல்லமையற்றவரை வலியார் சுரண்டவிடாமல் பாது காத்தல்.

* இதர பொதுவான சமூக நீதிகளைக் கடைப்பிடித்தல். ஆகிய இலட்சியங்களைக் கொண்ட அரசை நிலைநாட்ட உழைத்தல்.

3.6 தமிழ் பேசும் இனத்தின் பிறப்புரிமையாகிய சுதந்திரத் தினையும், சுயாட்சியின் மெய்யான பயனையும் இலங்கை என்னும் பரந்து பட்ட நிலப்பரப்பிலோ அல்லது தமிழ் பேசும் இனத்தின் பாரம்பரிய சொத்தாகிய தமிழ் மண்ணிலோ பெறுவதன் மூலம் தமிழ் பேசும் இனம் சுதந்திர வாழ்வு பெறமுடியும் என்று தமிழ்க் காங்கிரஸ் கருதுகின்றது.

3.7 அரசியல் தந்திரங்கள்; சமாதானப் பேச்சுவார்த்தைகள் வட்டமேசை மகாநாடு போன்றவற்றின் மூலம் சுதந்; திரத்தினை அடைவதற்கான முயற்சிகளில் தமிழ்க்காங் கிரஸ் ஈடுபடும்.

3.8 சமாதான வழிமுறைகள் மூலம் தமிழ் பேசும் இனத் திற்குச் சுயாட்சியின் மெய்ப்பொருள் கிடைக்கச் செய் வது முடியாதாயின் தமிழ் பேசும் இனத்தின் மரபுவழித் தாயகத்தில் வாழும் மக்கள் சுயாட்சி என்ற அடிப்படைத் தத்துவத்தின் இணைபிரியாக் கிளைத்துணிபு ஆகிய 'சுயநிர்ணய உரிமையை பிரயோகித்துத் தமக்குரிய சுயாட்சியினைப் பெறக்கூடிய வகையில் தமிழ்க் காங் கிரஸ் செயலாற்றும்.

## 4. காங்கிரசின் அமைப்பு

காங்கிரஸ் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்:-

4.1 பிரிவு 6 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள்

4.2 உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளைகள் (இதன் பின்னால் 'கிளை' எனக்குறிப்பிடப்படுவன) :- முடிந் தளவு தமிழ் பேசும் மக்கள் வாழும் ஒவ்வொரு உ. அ. அ. பிரிவிலும் கிளைகள் கூடிய அளவில் நிறுவப்படும்.

4.3 தமிழ் இளைஞர் காங்கிரஸ் — இது அங்கத்தவர்களான இளைஞர்களைக் கொண்டிருக்கும்.

4.4 தமிழ் மகளிர் காங்கிரஸ்:— இது அங்கத்தவர்களான பெண்களைக் கொண்டிருக்கும்.

4.5 காங்கிரஸ் தொழிலாளர் சம்மேளனம்:— இது அங்கத்தவர்களான தொழிலாளர்களைக் கொண்டிருக்கும்.

4.6 செயற்குழு;— செயற்குழு அங்கத்தவர்கள் மகா சபையால் அல்லது பொதுச் சபையால் அமர்வின் போது தெரிவு செய்யப்படவேண்டும்.

4.7 பொதுச் சபை: பொதுச்சபை அங்கத்தவர்கள் அமர்வின்போது மகாசபையினால் அல்லது கிளைகளினாலும், உத்தேச கிளைகளினாலும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

4.8 மகாசபை:— மகாசபை என்பது அங்கத்தவர் பொதுப் பதிவேட்டில் சேர்க்கப் பட்டு குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உரிமையுள்ள காங்கிரசின் அங்கத்தவர்களின் அமைப்பைக் குறிப்பிடுவதாகும்.

4.9 அமர்வு:- அமர்வு என்பது மகா சபையின் அல்லது பொதுச் சபையின் வருடாந்த கூட்டமாகும்.

4.10 விசேட அமர்வுகள்:— விசேட அமர்வு என்பது ஓர் குறிப்பிட்ட விடயத்தை அல்லது விடயங்களை மட்டும் ஆராய்வதற்கென கூட்டப்பட்ட அல்லது அங்கத்தவர்களின் விசேட வேண்டுகோளின் பேரில் ஓர் குறிப்பிட்ட விடயத்தை அல்லது விடயங்களை மட்டும் ஆராய்வதற்கென கூட்டப்பட்ட மகாசபையின் அல்லது பொதுச் சபையின் கூட்டமாகும்.

## 5. முகாமை:

காங்கிரசின் நடவடிக்கைகள் யாவும் மகாசபையின் அல்லது பொதுச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் செயற்குழுவினால் முகாமைப்படுத்தப்பட வேண்டும்.

## 6. அங்கத்துவம்:

6.1 காங்கிரசின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் இணங்கி இந்த யாப்பினை ஏற்றுக்கொள்ளும் எந்த ஒரு தமிழ் பேசும் ஆளும் அங்கத்தவராவதற்கு தகவுடைய வராவார்.

6.2 அங்கத்தவராவதற்கான விண்ணப்பம் அதற்கென விதித்தபடிவத்தில் செய்யப்படுவதுடன்; விண்ணப்ப காரரால் கையொப்பமிடப்பட்டு அனுமதிக் கட்டணத் துடனும்ஆண்டுச்சந்தாவுடனும்பொதுச்செயலாளருக்கு நேரடியாக அல்லது கிளைகள் இருப்பின் கிளைச்செயலாள ரூடாக அனுப்பி வைக்கப்படவேண்டும். இந்த விண் ணப்பப்படிவம் காங்கிரசில் அங்கத்தவர்களாயுள்ள முன் மொழிபவர் ஒருவரினிதும், வழிமொழிபவர் ஒருவரி னதும் கையொப்பங்களையும் கொண்டிருக்கவேண்டும்.

6.3 அங்கத்துவத்துக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கென செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் ஒருவர் செயற்குழு வினால் அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்பே அங்கத்தவராவார். காரணம் காட்டாது எந்த வொரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை செயற் குழுவுக்கு உண்டு.

6.4 செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப் பங்கள் எல்லாம், வதிவிடங்களின் அமைவுக்கேற்பப் பிரிக்கப்பட்டுக் கிளைகள் இருக்குமாயின்பொருத்தமான கிளைகளில் சேர்த்துக் கொள்ளப்படும். குறிப்பிட்ட வேளையில் குறிப்பிட்ட பிரதேசத்தில் கிளை எதுவும் இல்லாத சந்தர்ப்பத்தில் அங்கத்தவராகச் சேர்க்கப் படும் விண்ணப்பகாரரின் பெயர் தலைமை அலுவலகத் தில் பேணப்படும் பதிவேட்டில் குறிப்பிட்ட உ. அ. அ. பகுதிக்கான கிளை ஆரம்பிக்கப்படும் காலம் வரையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும்.

6.5 காங்கிரசின் நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் எதிரானதும் முரணானதுமான கொள்கைகளையும் நோக் கங்களையும் உடைய எந்தவொரு அமைப்பிலோ அல்லது வேறெந்த அரசியல் கட்சியிலோ அங்கத்தவராக இருக்கும் எவரும் காங்கிரசில் அங்கத்தவராக இருத்தல் இயலாது.

## 7. சந்தா :

7.1 அங்கத்தவர் ஒருவரால் ஒவ்வொரு ஆண்டுக்குமெனச் செலுத்தப்படவேண்டிய ஆகக் குறைந்த சந்தாப்பணம் ரூபா 3/- ஆகும். அனுமதிக்கட்டணமாக ஒரு தடவை மட்டும் செலுத்தவேண்டிய பணம் 50சதமாகும். ரூ 100/= செலுத்தும் அங்கத்தவர்கள் தாங்கள் காங்கிரசில் அங்கத்தவர்களாக இருக்கும் காலம் வரையும் ஆண்டுச் சந்தாவான ரூ 3/- செலுத்த வேண்டியதில்லை.

7.2 தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்தலுக்கான ஆண்டுச் சந்தாவை அந்த ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதியன்றே அதற்கு முன்னரோ அங்கத்தவர்கள் முன் கூட்டியே செலுத்த வேண்டும்.

7.3 எந்தவொரு ஆண்டுக்குமான தமது அங்கத்துவத்தை, அந்த ஆண்டின் பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு புதுப்பிக்கத் தவறும் எந்தவொரு அங்கத்தவரும் எந்த வொரு கூட்டத்தின்போதும் வாக்களிப்பதினின்றும்தடை செய்யப்படுவதுடன் பதவி வகிப்பதற்கும் தகைமையற்ற வராவதுடன், அவர் தமது அங்கத்துவத்தைப் புதுப்பிக்கும் காலம் வரை எந்தவொரு உரிமைக்கும் உரித்துடையவராகார்.

## 8. உத்தியோகத்தர்கள் :

தலைவர், ஏழு உபதலைவர்கள், ஓர் பொதுச்செயலாளர் ஓர் துணைச்செயலாளர், ஓர் பொருளாளர், ஓர் துணைப் பொருளாளர், ஓர் பிரசாரச் செயலாளர், ஓர் நிருவாகச் செயலாளர் என்போரே காங்கிரசின் உத்தியோகத்தர்களாவர்.

## 9. உத்தியோகத்தர் தெரிவு:

9.1 எல்லா உத்தியோகத்தர்களின் தெரிவும் அமர்வின்போது இடம்பெறும்.

9.2 போட்டியாளர் ஒவ்வொருவரும் பிரிவுகள் 6;7 என்பவற்றின் கீழ் காங்கிரசின் முறையான தகைமை கொண்ட அங்கத்தவர்களாயிருக்கவேண்டும்.

9.3. காங்கிரசில் அல்லது அதன் உறுப்புக்களின் உத்தியோகத்தர் பதவிகளுக்கான வேட்பாளர்கள், தங்கள் வேட்பு மனுக்களை அமர்வுக்கான அறிக்கை அல்லது அறிவித்தல் வெளியான நாளிலிருந்து நான்கு வார காலத்துக்குள் பொதுச்செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். வேட்பு மனுக்கள், யாவும் காங்கிரசில் அங்கத்தவர்களாயுள்ள முன்மொழிபவர் ஒருவராலும் வழிமொழிபவர் ஒருவராலும் கையொப்பமிடப்பட்டிருப்பதுடன், வேட்பாளரின் ஒப்புதலையும் கொண்டிருப்பதுடன், இப்போட்டியாளர்கள் கிளைகளில் அங்கம் வகிக்குமிடத்து அக்கிளையின் ஆதரவையும் பெற்றிருக்க வேண்டும்.

9.4. போட்டி ஏற்பட்டவிடத்து தெரிவுச் சபை இரகசிய வாக்களிப்பு மூலமே தமதுவாக்குகளை செலுத்தி தெரிவை நடாத்தும்.

9.5. அப்பதவிக்கு அதிகப்படியான வாக்குகளைப்பெறும் வேட்பாளரே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவுச் சபைத் தலைவர் அறிவிப்பார்.

## 10. கடமைகள் :

10.1. தலைவர்:—காங்கிரஸ் மகாசபை, பொதுச்சபை செயற்குழு ஆகியவற்றின் கூட்டங்களின் பதவி வழித் தலைவராயிருப்பதுடன், கூட்டங்கள் நடாத்துவது தொடர்பான பணிப்புரைகள், தீர்ப்பளித்தல் என்பனவற்றுக்கான எல்லா அதிகாரங்களையும் இவர் கொண்டிருப்பார். காங்கிரசின் நோக்கங்களுக்கும், குறிக்கோள்களுக்கும் அமைய கோட்பாடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், நடவடிக்கைகள் என்னும் விடயங்கள் தொடர்பில் அறிக்கைகள் வெளியிடவும் இவ்யாப்பினால் தலைவருக்கென உரித்தாக்கப்பட்ட எல்லாக் கடமைகள், உரிமைகள், அதிகாரங்கள், அவை தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் ஆகியனவற்றை நடைமுறைப் படுத்தவும் உரித்துடையவராவர்.

10.2 உபதலைவர்கள்:- தலைவர் சமுகமளிக்காத எந்தவொரு கூட்டத்திற்கும் உபதலைவர்களில் ஒருவர் தலைமை வகிப்பார். தலைவர் தமது கடமைகளைச் சரிவர நடாத்துவதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளையும், அறிவுரைகளையும் இவர்கள் வழங்குவார்கள். இவ் யாப்பினால் தலைவருக்கென விதிக்கப்பட்டுள்ள கடமைகளை உரிமைகளை அதிகாரங்களைத் தலைவருக்குப் பதிலாகக் கடமையாற்ற வேண்டி நேரிடின் பிரயோகிக்கவும் செயற்படுத்தவும் கடமைப்பாடுடையவராவர்.

10.3 பொதுச்செயலாளர்:- இவரே காங்கிரசின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவர். காங்கிரசின் குறிக்கோள்களுக்கும், நோக்கங்களுக்கும் அமைய கோட்பாடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் நடவடிக்கைகள் என்பன தொடர்பில் அறிக்கைகள் வெளியிடும் அதிகாரம் கொண்டவராவர். எல்லாக் கூட்டங்களையும் கூட்டுவதற்கும் அல்லது கூட்டங்களை கூட்டும்படி பணிப்பதற்கும் உரித்துடையவர் ஆவார். செயற்குழுவின் தீர்மானத்துக்கேற்ப இவரே அமர்வுகளின் போது ஆலோசிக்கப்படவேண்டிய விடயங்களுக்கான நிகழ்ச்சிநிரலைத் தயாரிப்பார். செயற்குழுவின் நிகழ்ச்சிநிரலையும் இவரே தயாரிப்பார். அமர்வின்போது சமர்ப்பிக்கப்படுவதற்காக காங்கிரசின் ஆண்டறிக்கையையும் இவரே தயாரிப்பார். மகாசபை, பொதுச்சபை, செயற்குழு என்பனவற்றின் எல்லாக் கூட்ட அறிக்கைகளையும் பதிவேடுகளையும் பேண வேண்டியதும் இவரது பொறுப்பேயாகும். வதிவிட அடிப்படைக்கேற்ப பொருத்தமான கிளைகளின் கீழ் காங்கிரஸ் அங்கத்தவர்களைத் தொகுத்து எல்லா அங்கத்தவர்களினதும் பெயர்களைக் கொண்டதான பொது அங்கத்தவர் பதிவேட்டை இவர் பேணுவார். காங்கிரசின் எல்லா ஆவணங்களும் பதிவேடுகளும் இவர் பொறுப்பிலும் கண்காணிப்பிலும் இருக்கும். தமது எண்ணத்தில் எந்தவொரு அங்கத்தவரும் காங்கிரசின் நலனுக்கெதிராக நடக்கின்றாரெனத் தோன்றிய விடத்து; அவ்விடயத்தையிட்டு செயற்குழுவிற்கு அறிவித்து அதன் இறுதி முடிவை எதிர்பார்த்து அந்த அங்கத்தவரின் அங்கத்துவத்தை உடனடியாகத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு. இவர் இப்படியான இடை நிறுத்தத்தையிட்டு உடனடியாக

எழுத்து மூலம் தலைவருக்கு அறிவிக்க வேண்டும். செயற்குழு தனக்கு அறிவிக்கப்பட்ட இப்படியான விடயங்களையிட்டு ஒரு மாத காலத்திற்குள் தீர்மானிக்க வேண்டும். இவ் யாப்பினால் பொதுச் செயலாளருக்கென உரித்தாக்கப்பட்ட எல்லாக் கடமைகள், உரிமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றைச் செயற்படுத்தும் உரிமையும் கொண்டவராவர்.

10.4 துணைச் செயலாளர்-: பொதுச் செயலாளருக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவியையும் அறிவுரையையும் இவர் வழங்குவார். எந்தவொரு விடயத்தையும் செய்யும்படி பொதுச்செயலாளரால் எழுத்து மூலம் கோரப்பட்ட விடத்து அக்கடமையை இவர் நிறைவேற்றுவார் காங்கிரஸ் கிளைகளின் நடவடிக்கைகளையிட்டு அறிக்கைகளைப் பெற்று அவற்றினை காலத்துக்குக் காலம் செயற்குழுவுக்கு இவர் சமர்ப்பிப்பார். கிளைகளின் நடவடிக்கைகளின் இணைப்பு உத்தியோகத்தராக இவர் இருப்பார். கிளைகளுக்கும் செயற்குழுவுக்குமிடையிலான உறவுகொள் உத்தியோகத்தராகவும் இவர் செயற்படுவார். அத்துடன் இவ் யாப்பினால் துணைச் செயலாளருக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எல்லா ஏற்பாடுகளுக்கும் அதற்கிணங்க எடுக்கப்படும் தீர்மானங்களினால் அளிக்கப்படும் கடமைகள், உரிமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றை நிறைவேற்றும் கட்டுப்பாடுடையவராவார்.

10:5. பொருளாளர்: கட்சியின் வேலைகள் யாவற்றிற்கும் வேண்டிய பணத்துக்கான ஓர் நிதியை இவர் ஒழுங்கு செய்து அதனைப் பேணுவார். காங்கிரசுக்கான எல்லா அனுமதிக்கட்டணம், சந்தாப்பணம், உதவு தொகைகள், நன்கொடைகள் என்பனவற்றை ஏற்று அதற்கான பற்றுச்சீட்டை வழங்குவார். காங்கிரசின் எல்லா நிதியையுமிட்டுச் சரியான கணக்குகளை பேணுவதுடன் ஒவ்வொரு மாதாந்தச் செயற்குழுக் கூட்டத்திலும் வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

பங்குனி 31ற்கு முன் தமது அங்கத்தவர்தைப் புதுப்பித்துக் கொள்ளாத எல்லா அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியலையும் இவர் செயற்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

காங்கிரசின் பணங்கள் யாவும் செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் வங்கி ஒன்றில் வைக்கப் படுவதுடன், எழுதப்படும் காசோலைகள் யாவும் தலைவரின் அல்லது செயலாளரின் கையொப்பத்துடன் பொருளாளரின் கையொப்பத்தையும் கொண்டிருக்க வேண்டும். செயற்குழுவின் அனுமதி பெருது அனுமதிக் கப்பட்ட சிறு செலவுக்காசுக்கு மேலாக எந்தவொரு செலவையும் இவர் செய்ய முடியாது.

அமர்வின் போது அங்கீகரிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் ஒன்றினால் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதியறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் இவ் யாப்பினால் பொருளா ளருக்கென உரித்தாக்கப்பட்ட எல்லா ஏற்பாடுகளையும் அதற்கிணங்க மேற்கொள்ளும் எல்லா தீர்மானங்களையும் நடைமுறைப் படுத்தும் பொறுப்புடையவராவர்.

10.6 துணைப் பொருளாளர்:- இவர் பொருளாளருக்கு அவர் தமது கடமைகளை செய்யுமிடத்து பொதுவாக உதவ வேண்டியவராவர் இவர் கிளைகளின் பொருளாளர்களு டன் தொடர்பு கொண்டு தை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக அங்கத்துவம் புதுப்பித்தல் இடம்பெறுவதை கவனிக்க வேண்டிய பொறுப்புடையவரா்வர். இவ் யாப் பினால் பொருளாளருக்கு உதவியாக அல்லது அவரின் கடமைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பணிக்கப் படுமிடத்தோ அல்லது யாப்பின் ஏற்பாடுகளுக்கமையத் தீர்மானம் எடுக்கப்படுமிடத்தோ, அதற்கிணங்கக் கட மைபுரியவும், உரிமைகளைப் பிரயோகிக்கவும் தத்துவமு டையவராவர்.

10 7 பிரசாரச் செயலாளர்: காங்கிரசின் குறிக்கோள்கள்; நோக்கங்கள் என்பன வற்றிற்கு அமைவாக அதன் கோட்பாடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், நடவடிக்கைகள் என்பன வற்றின் மேம்பாட்டுக்கான பிரசாரத்துக்கு இவரே பொறுப்பானவராவார்.

இவர் கூட்டங்கள், சொற்பொழிவுகள், விவா தங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், கலைநிகழ்ச்சி கள் போன்றவற்றை ஒழுங்கு செய்வார்.

காங்கிரசின் பிரசார ஏற்பாட்டு விடயங்கள் எல்லாவற்றிற்கும் இவரே பொறுப்பானவராயிருப்பார் இவ் யாப்பினால் இவரால் செயற்படுத்தப்படவேண்டு மென்று விசேடித்துக் கூறப்படும் ஏற்பாடுகளுக் கிணங்கப் பணிந்தொழுகும் கடப்பாடுடையவராவர்.

10:8. நிருவாகச் செயலாளர்: காங்கிரசின் தலைமை அலுவலகத்தில் இவர் செயலாற்றுவார் தலைமை அலுவலகத் தைப் பொறுப்புணர்வுடன் மேற்பார்வை செய்தலும், நிர்வகித்தலும், இவரின் பிரதான கடமைகளாகும்.

காங்கிரசின் சொத்துக்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதான ஓர் பொருட் பதிவேடு ஒன்றினை இவர் பேணவேண்டும்.

இவ் யாப்பின் ஏற்பாடுகளால் இவருக்கென உரித் தாக்கப்பட்ட விடயங்கள் அது தொடர்பான தீர்மானங் களைச் செயற்படுத்தும் கடப்பாடுடையவராவர்.

## 11. கிளைகள்

11:1 உ. அ. அ. பகுதி ஏதிலும் ஆகக் குறைந்த பட்சம் 25 அங்கத்தவர்கள் இருக்குமிடத்து, அக்குறிப்பிட்ட உ. அ. அ. பகுதிக்கான கிளை அந்த அங்கத்தவர்களைக் கொண்டு ஏற்படுத்தப்படலாம். இப்படியான கிளைகளின் நடவடிக்கைகள் யாவும் செயற்குழுவால் குறிப்பிடப் பட்டு வரையறை செய்யப்படும்.

11;2. ஒவ்வொரு கிளையும் தை மாதம் 31 ம் திகதிக்கிடையில் ஆண்டுக்கூட்டத்தைக் கூட்டி தமது கிளைத் தலைவர், செயலாளர், பொருளாளர் என்போரும் காங்கிரசின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் அமைவாக தமது பிரதேசத்தில் அதன் கோட்பாடுகள், கொள் கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றை நடாத்துவதற்கு 2 அங்கத்தவர்களுக் குக்குறையாததும் 10 அங்கத்தவர்களுக்கு மேற்படாதது மான ஓர் கிளைக்குழுவையும் தெரிவு செய்ய வேண்டும்.

11:3. அதே கூட்டத்தில் அடுத்த ஆண்டிற்கான தங்களது பொதுச்சபை உறுப்பினர்களையும் தெரிவு செய்ய வேண்டும்.

11:4. ஒவ்வொரு கிளைகளின் செயலாளர்களும் தெரிவு இடம் பெற்று ஒரு வார காலத்திற்குள் தெரிவு செய்யப் பட்ட பொதுச்சபை உறுப்பினர்கள், கிளை உத்தியோ கத்தர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர், முகவரி, என்பன போன்ற விபரங்களை பொதுச் செயலாளருக்கு அறிவிக்கவேண்டும்.

11:5. கிளைகளின் செயலாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது கிளைகளின் வேலைபற்றியதான ஓர் அறிக்கையை அமர் வுக்கெனக் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து 30 நாட் களுக்குமுன் பொதுச் செயலாளருக்கு அவரது அறிக் கையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கென அனுப்பி வைக்கவேண்டும்.

11:6. கிளைச் செயலாளர் பொதுச் செயலாளரிடமிருந்து, அங்கத்தவர் விண்ணப்பப் படிவங்களைக் கோரிப் பெற்று அப்படிவங்களை முறையாக நிரப்புவித்து அதற்கான

அனுமதிக்கட்டணம் சந்தாப்பணம் ஆகியவற்றை அவற்றை நிரப்பிய ஒருவார காலத்துக்குள் பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

11:7. கிளையின் ஆதரவு பெற்ற காங்கிரசின் எந்தவொரு உத்தியோகத்தர் பதவிக்கான வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை, அது காங்கிரசின், அல்லது அதன் உறுப்பு களின் பதவிகளுக்காயிருப்பினும் கிளையின் செயலாளர் தமதும் தலைவரதும் அங்கீகாரத்துடன் சேர்த்து பொதுச் செயலாளருக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

11:8. ஒவ்வொரு கிளையின் பொருளாளரும் தத்தமது கிளைகளைச் சேர்ந்த அங்கத்தவர்களின் பட்டியல் ஒன்றை சரியாகப் பேணுவதுடன் அங்கத்தவர்களின் பெயர், முகவரி என்பன அடங்கிய நிறைவான பட்டியல் ஒன்றை தலைமை அலுவலகத்தில் பேணப்படும் கிளைப் பதி வேட்டில் பேணுவதற்கென பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். பெறப்பட்ட பணம்; செலவு செய்த பணம் என்பனவற்றுக்கான கணக்குகளையும் சரிவரப் பேணுவதுடன் செயற்குழுவுக்கு சமர்ப்பிப் பதற்கென புதுப்பிக்கப்படாத அங்கத்தவர் பெயர்ப்

பட்டியல் ஒன்றையும் பங்குனி மாதம் 31 ஆம் திகதி யளவில் காங்கிரசின் பொருளாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்; தைமாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தைப் புதுப்பித்தலை கவனிக்கவேண்டியது இவரது கடமை ஆகும்.

## 12. தமிழ் இளைஞர் காங்கிரஸ்.

12:1. இது அங்கத்தவர்களான இளைஞர்களைக் கொண்டிருக்கும் இது எல்லாக்கிளைகளிலுமுள்ள எல்லா இளைஞர்களையும் உள்ளடக்கியதான ஒரே அமைப்பாக இருக்கும்.

12:2. அமர்வின் போது ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் ஒரு செயலாளர், ஒரு ஆணைச் செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு பிரசாரச் செயலாளர், ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

12·3. இவ் அமைப்பின் உத்தியோகத்தர்கள் செயற் குழுவில் அங்கத்தவர்களாயிருப்பர்.

12:4. இவ்வமைப்பின் உத்தியோகத்தர்களின் கடமைகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில் காங்கிரசின் ஒத்த உத்தியோகத்தர்களின் கடமைகளை ஒத்ததாகவே இருக்கும்.

## 13. தமிழ் மகளிர் காங்கிரஸ்.

13:1. இது அங்கத்தவர்களான பெண்களைக், கொண்டிருக்கும். இது எல்லாக் கிளைகளிலுமுள்ள எல்லாப் பெண் அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய ஒரே அமைப்பாக இருக்கும்.

13:2. அமர்வின்போது ஒரு தலைவி, ஒரு துணைத் தலைவி ஒரு செயலாளர், ஒரு துணைச் செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு பிரசாரச் செயலாளர் என்போர் தெரிவு செய்யப்படுவர்.

13:3. இவ் அமைப்பின் உத்தியோகத்தர்கள் செயற்குழு அங்கத்தவர்களாயிருப்பர்.

13.4. இவ் அமைப்பின் உத்தியோகத்தர்களின் கடமைகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில், காங்கிரசின் ஒத்த உத்தியோகத்தர்களின் கடமைகளை ஒத்ததாகவே இருக்கும்.

## 14. காங்கிரஸ் தொழிலாளர் சம்மேளனம்.

14.1. காங்கிரசின் அனுமதிபெற்று காங்கிரஸ் அங்கத்தவர்களான அரசாங்க; தனியார் துறைத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைத்துக்கொள்ளலாம். இரண்டு சங்கங்களுக்கு மேல் இருப்பின் அவை ஓர் கூட்டமைப்பாக (சம்மேளனம்) அமையும்.

14.2. ஒவ்வொரு தொழிற் சங்கமும், சம்மேளனமும் தத்தம், தலைவர் துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், பிரசாரச் செயலாளர் என்போரைத் தெரிவு செய்யும்.

14.3. இச் சம்மேளனத்தின் உத்தியோகத்தர்கள் செயற்குழுவில் அங்கத்தவர்களாக இருப்பர்.

14.4. இச் சம்மேளனத்தின் உத்தியோகத்தர்களின் கடமைகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில் காங்கிரசின் ஒத்த உத்தியோகத்தர்களின் கடமைகளை ஒத்ததாயிருக்கும்.

## 15. செயற்குழு:

15.1. காங்கிரசின் செயற்குழு காங்கிரசின் உத்தியோகத்தர்கள், தமிழ் இளைஞர் காங்கிரஸ் உத்தியோகத்தர்கள், தமிழ் மகளிர் காங்கிரஸ் உத்தியோகத்தர்கள், காங்கிரஸ் தொழிலாளர் சம்மேளன உத்தியோகத்தர்கள், என்போரையும் உப தலைவர்கள், பொதுச் செயலாளர் ஆகியோரின் சிபார்சின்படி தலைவரால் நியமிக்கப்படும் 15 உறுப்பினர்கள், காங்கிரஸ் பட்டியலிலிருந்து மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபைகளுக்கு விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கும்.

15.2. இதுவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட சபையாயிருப்பதுடன் காங்கிரசின் குறிக்கோள்களுக்கும், நோக்கங்களுக்கும் அமைவாக அதன் கோட்பாடுகள்

கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், நடவடிக்கைகள் என்பனவற்றை செயற்படுத்தும் அதிகாரம் கொண்டதாயிருக்கும். இது மகாசபையின் அல்லது பொதுச் சபையின் பணிப்புரைகளை நிறைவேற்றுவதுடன் இச் சபைகள் இரண்டிற்கும் பொறுப்பானதாயிருக்கும்.

15.3. எல்லாக்கிளைகளினதும்: அங்கம் வகிக்கும் உறுப்புக்களினதும் பதிவேடுகள், பத்திரங்கள், கணக்கேடுகள் என்பனவற்றைச் சோதனையிடுவதற்கு பொதுச் செயலாளரையும் வேறு சில ஆட்களையும் நியமிக்கும். அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கு இவ் அமைப்புக்கள் எல்லாத் தகவல்களையும் தந்துதவுவதுடன் எல்லா ஆவணங்களையும் அவர்களின் பார்வைக்கு தந்துதவவும் வேண்டும்.

15.4. காங்கிரசின் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் முரண்படாத வகையில் காங்கிரசினை ஒழுங்குபடுத்த விதிகளை வரைவதற்கும், வேறுவகையில் யாப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாகவும், யாப்பு சரியானமுறையில் இயங்குவதற்கும் வேண்டிய அறிவுறுத்துரைகளை வழங்குவதற்கும் இதற்கு அதிகாரம் உண்டு.

15.5. சந்தர்ப்பம் எழுந்தவிடத்து விசேட தேவைகளுக்கென விசேட குழுக்களையும் இது நியமிக்கும்.

15.6. பொதுவாக இதன் அதிகாரங்களாவன கிளைகளுக்கு உதவுவது; மதியுரை வழங்குவது, கண்காணிப்பது, கிளைகளை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது அவற்றின் அதிகாரங்களை குறிப்பிடுவது, அவற்றின் வேலைகளை ஒருங்கிணைப்பதுமாகும்.

15.7. காங்கிரசிற்கும் அதன் குறிக்கோள்கள், கொள்கைகள், நோக்கங்கள், கோட்பாடுகள் அல்லது காங்கிரசின் தீர்மானங்கள்; யாப்பு என்பனவற்றிற்கு விசுவாசமின்மை எனக் கண்டவிடத்தும், தீயநடத்தை அல்லது வேண்டுமென்றே கடமைகளை அசட்டை செய்தல் அல்லது கடமை தவறுதல் போன்ற குற்றங்களுக்காக எந்தவொரு காங்கிரஸ் அங்கத்தவருக்கும் எதிராக

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் அல்லது அவரை விலக்குவதற்கும் அல்லது எந்தவொரு குழுவையும் அல்லது கிளையையும் கலைப்பதற்கும் அதிகாரம் உண்டு. இதற்கென இக்குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்வதற்கு செயற்குழு ஓர் ஒழுக்காற்றுக் குழுவை நியமிக்கலாம்.

15.8. அங்கத்துவத்துக்கான விண்ணப்பம் எதையும் ஏற்றுக் கொள்வதையிட்டு தீர்மானிப்பதற்கான அதிகாரமும் இதற்குண்டு.

15.9 காங்கிரசின் பட்டியலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் பதவிவகிக்கும் காலத்தை தீர்மானிக்கும் உரிமையும் இதற்குண்டு. செயற்குழுவின் தீர்மானங்களை மீறி நடக்கும் எவரும் காங்கிரசிலிருந்து விலக்கப்படுவதற்கான குற்றச் செயலைப் புரிந்தவராகின்றார்.

15:10 தமது பிரதேசத்திலுள்ள கிளையை ஒழுங்கு செய்யவும் அமைக்கவும் என ஒவ்வொரு உ. அ. அ. பிரிவுகளிலும் ஓர் அமைப்பாளரை நியமிப்பதற்கு இதற்கு அதிகாரம் உண்டு.

15:11 இது ஆகக்குறைந்தது மாதத்தில் ஒருமுறையேனும் அல்லது இதன் அங்கத்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பொதுச்செயலாளருக்கு பதிவுத் தபால் மூலம் கோரிக்கை விடுத்த விடத்தும் கூட்டப்படவேண்டும். இப்படியான கூட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கத்தவர்களுக்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்குமுன் அறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

15:12 மேற்குறிப்பிட்டபடி கோரியவிடத்து, இரண்டு வார காலத்துக்குள் பொதுச்செயலாளர் கூட்டத்தை கூட்டுவதற்கு தவறியவிடத்து அல்லது மறுத்த விடத்து அக்கோரிக்கை துணைச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட விடத்து துணைச்செயலாளர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும். இக்கூட்டத்தை இரண்டு வாரகாலத்துக்குள் கூட்டுவதற்கு தவறியவிடத்து, அல்லது மறுத்த விடத்து, இப்படியான கோரிக்கை தலைவருக்கு அனுப்பப்படின் தலைவர் இக்கூட்டத்தைக் கூட்டலாம். அவரும் இரண்டு வார காலத்துக்குள் இக்கூட்டத்தை கூட்டு

வதற்கு தவறியவிடத்து, அல்லது மறுப்புத் தெரிவித்த விடத்து அக்கோரிக்கையில் கையொப்பமிட்ட அங்கத் தவர்கள் தாமாகவே, செயற்குழுவின் கூட்டத்தை பதிவுத் தபால் மூலம் இதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்து நடாத்தலாம்.

15:13 செயற்குழுக் கூட்டத்துக்கான நிறைவெண் (கோரம்) குறிப்பிட்ட அந்த நேரத்தில் இதன் முழு அங்கத்தவர் தொகையின் மூன்றில் ஒரு பங்கினர் அல்லது பதினைந்து பேர் இதில் எது குறைந்ததோ அது போதுமானதாகும்.

15:14 காங்கிரசின் கணக்காய்வாளர்களாக இருப்பதற்கென செயற்குழு நன்கு மதிக்கப்பட்ட ஓர் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தை நியமிக்க வேண்டும்.

15:15 அமர்வின்போது முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டத்தை இது நடைமுறைப்படுத்துவதுடன் இது ,பதவியிலிருக்கும் காலத்தில் எழும் புதியதும் அவசியமானதுமான விடயங்களையிட்டும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

15.16 தகுந்த காரணம் காட்டாது எழுத்து மூலம் அறிவிக்காது, தொடர்ந்து 3 செயற்குழுக் கூட்டங்களுக்கு சமூகம் கொடுக்காத எந்தவொரு அங்கத்தவரும் செயற்குழுவின் தீர்மானப்படி செயற்குழு அங்கத்தவர் பதவியை இழப்பார்.

15.17 தேவைக்கேற்ப விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மக்கள் மன்றங்களின் தேர்தல் தொடர்பான நியமனங்கள் பற்றிய முடிவுகளை எடுப்பதற்கென ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நியமனக் குழுக்களை இது நியமிக்கும். இப்படியான குழுக்களுக்கு பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளை வழங்குவதற்கு செயற்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

**16. <u>பொதுச்சபை :</u>**

16.1 இது செயற்குழு உறுப்பினர்களையும், மகாசபையினால் அல்லது ஒவ்வொரு கிளையினாலும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் கிளையற்ற ஒவ்வொரு உ. அ. பிரிவுக்கு

மான உறுப்பினர்களையும் தமிழ் மகளிர் காங்கிரசினால் நியமிக்கப்பட்ட 15 உறுப்பினர்களையும் தமிழ் இளைஞர் காங்கிரசினால் நியமிக்கப்பட்ட 25 உறுப்பினர்களையும், காங்கிரஸ் தொழிலாளர் சம்மேளனத்தினால் நியமிக்கப் பட்ட 10 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாயிருக்கும்

16.2 உறுப்பினர்கள் மகாசபையினால் அல்லது அக்குறிப் பிட்ட நேரத்தில் இருக்கும் கிளைகளினால் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

16.3 கிளையிலுள்ள ஒவ்வொரு 25 அங்கத்தவர்களுக்கும் ஒரு உறுப்பினர் தெரிவு செய்யப்படுவார்.

16.4 ஓர் கிளை ஒன்றை அமைப்பதற்குத் தேவையான 25 அங்கத்தவர்கள் உ. அ. அ. பிரிவில் இல்லாவிடினும் அத் தகைய உ. அ. அ. பிரிவிலிருந்தும் ஆகக்குறைந்தது ஒரு உறுப்பினராவது தெரிவு செய்யப்பட வேண்டும். இந்நோக்கிற்காக அப்பகுதி அங்கத்தவர்கள் கூடி இவ் உறுப்பினரைத் தெரிவு செய்வர்.

16:5 எதிர்வரும் ஆண்டுக்கான செயற்குழுவை அமர்வின் போது இது தெரிவு செய்யும்,

16.6. அமர்வு தவிர செயற்குழுவின் கோரிக்கைப்படி இது கூட்டப்பட வேண்டும் அல்லது பொதுச் சபை அங்கத் தவர்களில் மூன்றில் ஒரு பகுதிக்குக்குறைவில்லாத அங்கத்தவர்கள் ஒரு குறிப்பிட்ட விடயத்தை அல்லது விடயங்களை ஆராய்வதற்கென பதிவுத் தபால் மூலம் பொதுச் செயலாளருக்கு கோரிக்கை விடுத்தவிடத்தும் கூட்டப்படவேண்டும்.

16.7. ஒவ்வொரு பொதுச் சபைக்கூட்டத்தையிட்டும் அதன் அங்கத்தவர்களுக்கு குறைந்த பட்சம் பத்து நாட் களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

16.8. பொதுச் சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் (கோரம்) 50 அங்கத்தவர்கள் அல்லது பொதுச் சபையின் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கினர் இதில் எது குறைவானதோ அவ்வெண் ணிக்கையாகும்.

## 17. மகாசபை:

17.1. மகாசபை என்பது காங்கிரஸ் பொதுப் பதிவேட்டில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் சமூகமளித்து வாக்களிக்கும் உரிமையுள்ள காங்கிரஸ் அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பாகும்.

17.2. மகாசபைக் கூட்டத்துக்கான நிறைவெண் (கோரம்) 150 அங்கத்தவர்களாகும்.

17.3. ஒவ்வொரு மகாசபைக் கூட்டத்தையிட்டும் அதன் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

## 18. அமர்வு:

18.1. அமர்வு என்பது மகா சபையின் அல்லது பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டமாகும்.

18.2. இக்கூட்டம் குறித்த ஓர் இடத்திலும் திகதியிலும் நேரத்திலும் செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு. முடிந்தளவு ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை மாதத்தில் நடைபெறும்.

18.3. அமர்வைப் பற்றியதான திகதியையிட்டு பொதுச் செயலாளர் ஆகக்குறைந்தது 40 நாட்களுக்கு முன்னதாக பத்திரிகை அறிவித்தல் மூலம் அல்லது அறிக்கை மூலம் அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

18.4. நிகழ்ச்சி நிரல் அமர்வு இடம்பெறவுள்ள திகதியிலிருந்து ஆகக்குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன் அறிவிக்கப்படவேண்டும்.

18.5. செயற்குழு, அமர்வு இடம்பெறவுள்ள பகுதிக் கிளையின் உசாவுதலுடன் ஓர் வரவேற்புக் குழுவையும், அதன் தலைவரையும் அமர்வுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதற்காக நியமிக்கும்.

18 6. விசேட காரணங்களுக்காக அல்லது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களின் விளைவாக ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை மாதத்தில் நடாத்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள அமர்வைப் பின்போடுவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

## 19. விசேட அமர்வு

19.1. விசேட அமர்வு என்பது குறிப்பிட்ட விடயங்களை மட்டும் ஆராய்வதற்கென விசேடமாகக் கூட்டப்பட்ட அல்லது மகாசபையின் நூறு அல்லது பொதுச் சபையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத அங்கத்தவர்களால் பதிவுத் தபால் மூலம் பொதுச்செயலாளருக்கு விடுக்கப்பட்ட விசேட கோரிக்கை ஒன்றின் பேரில் நடாத்தப்படும் மகாசபையின் அல்லது பொதுச்சபையின் கூட்டமாகும்.

19.2. இப்படியான கூட்டம் கூட்டப்படுவதற்கான தேவை, அக்கோரிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும் இக் கூட்டத்தின்போது குறிப்பிடப்பட்ட விடயம் அல்லது விடயங்கள் தவிர்ந்த விடயமோ; விடயங்களோ கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

19.3. முக்கியவிடயம் எதனையுமிட்டு ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்காக விசேட அமர்வுகளை நடாத்துவதையிட்டு செயற்குழு தீர்மானிக்கும்.

19.4. இப்படியான ஒவ்வொரு கூட்டத்தையிட்டும் அங்கத்தவர்களுக்கு ஆகக்குறைந்தது பத்துநாட்கள் முன் அறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

19.5. மகாசபைக் கூட்டத்திற்கான நிறைவெண் (கோரம்) 150 அங்கத்தவர்களாகும். ஆனால் பொதுச் சபையின் கூட்டத்திற்கான நிறைவெண் 50 அங்கத்தவர்கள் அல்லது பொதுச்சபையின் மொத்தத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் இதில் எது குறைவானதோ அவ் வெண்ணிக்கையாகும்.

## 20. அமர்வுகளின்போது மேற்கொள்ளப்படும் நடைமுறை

20.1. அமர்வுக்கான நிகழ்ச்சித்திட்டம், நடைமுறை விடயங்கள் நிகழ்ச்சி நிரல் என்பவற்றை செயற்குழு தீர்மானிக்கும்.

20.2. அமர்வு மகாசபை அல்லது பொதுச் சபை கூடுவதுடன் ஆரம்பமாகும்.

20.3. இவ்வமர்வு கட்சிக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். அப்போது கட்சிக்கீதம் இசைக்கப்படவேண்டும். பின், வரவேற்புக் குழுத்தலைவரால் வரவேற்புரை நிகழ்த்தப்படும். அடுத்துப் பொதுச் செயலாளர் முன்னைய அமர்வின் அறிக்கையையும், காங்கிரசின் ஆண்டறிக்கையையும் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பார், பின் பொருளாளர் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையை சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பிப்பார். இதனையடுத்து தலைமை உரை இடம் பெறும்.

20.4. இதனைத் தொடர்ந்து காங்கிரசினதும் அதில் அங்கம் வகிக்கும் உறுப்புக்களினதும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர்.

20.5. இதனையடுத்து தீர்மானங்களும் வேறு விடயங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 21. தீர்மானங்கள்:

21.1. மகாசபையின் முன் அல்லது பொதுச் சபையின் முன் சமர்ப்பிக்கப்படவுள்ள எல்லாத்தீர்மானங்களும் செயற்குழுவினால் தீர்மானிக்கப்படும். இப்படியான தீர்மானங்கள் முடிந்தளவு ஓர் கிளையிலிருந்தோ அல்லது செயற்குழுவிலிருந்தோ சமர்ப்பிக்கப்பட வேண்டும். மகாசபையின் முன் அல்லது பொதுச்சபையின் முன் தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்க விரும்பும் எந்தவொரு தனி அங்கத்தவரும் அப்படியான தீர்மானத்தின் பிரதி ஒன்றை பதிவுத் தபாலில் பொதுச் செயலாளருக்கு அனுப்பிய விடத்து அவர் அதனை செயற்குழுவிற்குச் சமர்ப்பிப்பார். செயர்குழுவ்ன் முன் சமர்ப்பிக்கப்படுவதற்கென தீர்மானங்கள் யாவும் அமர்வு நிகழவுள்ள திகதியிலிருந்து ஆகக் குறைந்தது நான்குவார காலத்திற்கு முன் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். செயற்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள் மட்டுமே அமர்வின்போது ஆராயப்படும்.

## 22. பதவிக்காலம்:

22.1. காங்கிரசினதும் அதின் அங்கமான ஏனைய உறுப்புக்களினதும் உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் மகாசபையின் அல்லது பொதுச் சபையின் ஒரு அமர்வு

நடந்த நாளிலிருந்து அடுத்த அமர்வு நடைபெறும் நாள்வரையான காலப்பகுதியாகும்.

22.2. அமர்வின்போது தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், தாம் தெரிவு செய்யப்பட்ட உடன் தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். முன்னைய உத்தியோகத்தர்கள் உடனடியாகத் தமது கடமைப் பொறுப்புக்களை ஒப்படைத்தல் வேண்டும்.

## 23. வெற்றிடங்கள்:

23.1. காங்கிரசின் உத்தியோகத்தரிடையே ஓர் வெற்றிடம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடம் தற்காலிகமாக அடுத்து வரும் செயற்குழுவின் மாதாந்தக் கூட்டத்தின் போது அல்லது அவசரக் கூட்டத்தின்போது செயற்குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவரால் நிரப்பப்படும். இப்படியான தெரிவு அடுத்து இடம்பெறவுள்ள அமர்வு மட்டும் செல்லுபடியாகும்.

23 2. செயற்குழுவின் காங்கிரஸ் உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர் மத்தியில் ஓர் வெற்றிடம் ஏற்படுமிடத்து அப்படியான வெற்றிடங்களை மகாசபை அல்லது பொதுச்சபை அங்கத்தவர் மத்தியிலிருந்து நிரப்பும் அதிகாரம் செயற்குழுவுக்கு உள்ளது.

23.3. பொதுச் சபையில் ஓர் வெற்றிடம் ஏற்பட்ட விடத்து அவ்வங்கத்தவர் யாரைப் பிரதிநிதித்துவம் வகித்தாரோ அவர்களுக்கு இன்னுமோர் அங்கத்தவரை நியமிப்பதற்கான உரிமை உண்டு.

## 24. யாப்பில் திருத்தம் செய்யும் முறைகள்:

24.1. இந்த யாப்பில் அமர்வின்போது அல்லது விசேட அமர்வின்போது மட்டுமே எந்தவொரு திருத்தமும் செய்யப்படலாம்.

24 2. யாப்புக்கான திருத்தம் எதுவும் தீர்மானம் மூலமே செய்யப்பட வேண்டும்.

24 3. யாப்புக்கான திருத்தங்கள் யாவும் அந்த அமர்வின் போது அல்லது விசேட அமர்வின்போது வருகை தந்த அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளின் மூலம் நிறைவேற்றப்படவேண்டும்.

## 25. வியாக்கியானம்

2.51. மேற்போந்த பிரிவுகளையிட்டும் அல்லது இங்கு தரப் படாத ஏதாவது விடயத்தையிட்டும் வியாக்கியானம் அல்லது விளக்கம் அளிக்க நேர்ந்தவிடத்து செயற் குழுவின் தீர்ப்பே முடிவானதும் அங்கத்தவரைக் கட்டுப் படுத்துவதுமாகும். செயற்குழுவைக் கூட்டி முடிவெடுக் கப்போதிய அவகாசம் இல்லாதவிடத்துத் தலைவரின் தீர்ப்பே இறுதியானதும் தீர்க்கமானதுமாகும்.

2.52. அவசரம், அல்லது எதிர்பாராத விளைவு ஏற்பட்ட விடத்து அந்த நிகழ்ச்சியை சமாளிப்பதற்கு யாப்பின் மேற்போந்த பிரிவுகள் எவற்றையேனும் தற்காலிகமாக மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு செயற்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இப்படியான மாற்றமும் அதற்கான காரணமும் பின்பு மகாசபையின் அல்லது பொதுச் சபையின் அங்கீகாரத்துக்கென அடுத்த அமர்வின் போது அல்லது விசேட அமர்வின்போது சமர்ப்பிக் கப்படவேண்டும்.

## 26. பொது :

26.1. இந்த யாப்பு 1980-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

26.2. 1980-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ஆம் திகதி சனிக்கிழமை காங்கிரசின் தலைமை அலுவலகத்தில் மகா சபையினால் தெரிவு செய்யப்பட்ட காங்கிரசினதும் அதில் அங்கம் வகிக்கும் உறுப்புக்களின் எல்லா உத்தி யோகத்தர்களும், செயற்குழு உறுப்பினர்களும் பொதுச் சபையின் அங்கத்தவர்களும் அடுத்த அமர்வு நடை பெறும் காலம் வரை பதவியில் இருப்பர்.

26.3. காங்கிரசின் நிதியாண்டு தைமாதம் முதலாம் திகதி தொடங்கி மார்கழி மாதம் 31-ஆம் திகதிமுடிவடையும்.

26.4. உத்தேசகிளைகள் என்பது குறிப்பிட்ட ஒரு உ. அ. அ. பிரிவில் 25 க்குக் குறைவான அங்கத்தவர்களிருக்கு மிடத்து பொதுப் பதிவேட்டிலுள்ள அவ் அங்கத்தவர் களைக் கொண்ட அமைப்பாகும்.

Certified as a correct official copy

S.R.K. [signature]

PRESIDENT

[signature]

GENERAL SECRETARY

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
## கீதம்

**வாழ்கவே வளர்க வாழ்கவே**

முத்தமிழ் முக்கொடி கொண்டினம் ஆண்ட
மூத்த இனத்தமிழ் மக்களைக் காக்கும்
வித்தகக் காங்கிரஸ் காட்டிடும் பாதையை
வென்றிட வேபணி செய்திடு வோமே. — வாழ்கவே ...

கல்லது தோன்றி மண்ணது தோன்றாக்
காலமுன் தோற்றிய மூத்த தமிழ்
நல்லின மங்கையென் றின்றுமிங் கேபயில்
நந்தமிழ் அன்னையைப் போற்றிடு வோமே — வாழ்கவே...

வண்ணங்கள் நாலுடை யெங்களி னின்கொடி
வாழ்ந்துசி றந்திடத் தூக்குமெ மிற்கொடி
விண்ணுற வேபறந் தாடிடும், நல்மற
வீரர்கள் கைகளில் மேவிடும் பொற்கொடி — வாழ்கவே ..

புகழுக்கு உறைவிடம் ஆனநம் தலைவன்
புண்ணியன் ஜீ. ஜீயின் கட்சியிலே நலம்
திகழும் தமிழகம் தீரரே போற்றிடச்
சேருவீர் ஓரணி வீரர்க ளேயினி — வாழ்கவே...

மண்டியிட் டேயறி யாதவி னம்என
மண்ணிலே காத்தவன் ஜீ. ஜீநம் தலைவன்
பண்டைய நம்புகழ் மீண்டும் அடைந்திடப்
பாடுப டுந்தமிழ்க் காங்கிரஸ் நன்றே — வாழ்கவே...

ஈழத்தி லேதமிழ் மக்களுக் காக
இங்கமைந் திட்டதோர் மூத்தநற் கட்சி
வாழத்து டிப்பவர் வாழ்விலே வெற்றி
வாகையைத் தந்திடும் வண்மையே காண்க. — வாழ்கவே ..

எம்மினம் தான்தலை யேநிமிர்ந் தோங்கிட
இங்குசு தந்திரம் சுபீட்சம் மலர்ந்திட
நும்மையெல் லாமழைத் திட்டனம் வந்தே
நல்கிடு வீருங்கள் தொண்டினை இன்றே. — வாழ்கவே...

காங்கிரஸ் கட்சியே ஓங்கிடும் காட்சி
காண்பது நிச்சயம் எம்செயல் சாட்சி
காங்கிரஸ் பேரணி வென்றிடும் மாட்சி
காணுவம் சேருவம் ஓரணி யாக. — வாழ்கவே

— மன்னவன் —